Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDENESDAY, JANUARY 10, 2024

புதன்கிழமை ஜனவரி 10, 2024 | ஒளி: 10 கதிர்: 168 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## சேர்.பொன்.அருணாச்சலத்தின்
# நூற்றாண்டு நினைவுதினம்

சுதந்திரமான தேசத்தைக் கட்டியெழுப்ப, சேர். பொன் அருணாச்சலத்தின் “இலங்கையர்” எண்ணக்கருவை “இலங்கையர்களின் தேவைகள்” என்ற வகையில் மேம்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

அந்த வேலைத்திட்டத்தைப் பலப்படுத்தும் வகையில் யுத்தம் சார்ந்த பிரச்சினைகள் அனைத்துக்கும் 2025இற்கள் தீர்வு காண எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, செவ்வாய்க்கிழமை (09) நடைபெற்ற சேர். பொன்.அருணாச்சலத்தின் நினைவுதின நூற்றாண்டு நிகழ்விலேயே



மேற்கண்டவாறு தெரிவித்தார். நினைவு தின நிகழ்வு ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக அவரது சிலை அமைக்கப்பட்டிருக்கும் வளாகத்தில் நடைபெற்றது.

தொடர்ச்சி P2

# எம்.பி பதவியை துறந்தார் சமிந்த விஜேசிறி



ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி, தனது எம்.பி பதவியை இராஜினாமா செய்து கொண்டார்.

தனது இராஜினாமா கடிதத்தை சபாநாயகர் மற்றும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளித்துவிட்டு, சபையில் உரையாற்றிய அவர், பாராளுமன்றத்துக்கு அண்மையில் இருக்கும் ஏரியை சுற்றி பார்க்க வந்தவர்கள், அங்கிருக்கும் முதலைகளிடம், பாராளுமன்ற உறுப்பினர்கள் 225 பேரையும் கொன்று திண்ணுமாறு சாபம் விடுத்தனர். அவர்கள், எங்களுடைய பிள்ளைகளுக்கும் சாபம் விடுகின்றனர் எனத் தெரிவித்த அவர், மக்கள் விரும்பும் பாராளுமன்றத்தை தெரிவு செய்வதற்கான தேர்தலை நடத்துமாறும் கோரினார்.

“எனக்கு ஐக்கிய மக்கள் சக்தியுடன் எந்த பிரச்சனையும் இல்லை. நான் அரசியலில் இருந்து வெளியேறுகிறேன். செயற்பாட்டு அரசியலையும் கைவிடுகிறேன்” என்றார்.

# புதிய எம்.பி வாசல திலக்க



ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் நயன வாசல திலக்க அடுத்த எம்.பியாக நியமிக்கப்படவுள்ளார். பதுளை மாவட்ட பொதுத் தேர்தலில் விருப்பு வாக்குப் பட்டியலின் அடிப்படையில், முன்னாள் எம்.பியான சமிந்த விஜேசிறி 36,291 வாக்குகளைப் பெற்றார்.

தொடர்ச்சி P2

## அணிசேரா நாட்டுக்கொள்கையை பின்பற்றினால்
# “கப்பலை எப்படி அனுப்ப முடியும்”
### ஹக்கீம் கேள்வி; “ஜோக்கர்” நாடாகி விடக்கூடாது என்றார்



இலங்கை அணிசேரா நாட்டுக்கொள்கையை பின்பற்றும் நாடாக இருந்தால் செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை அடக்குவதற்கு ஜனாதிபதியால் எவ்வாறு இலங்கை கடற்படை கப்பலை அனுப்ப முடியும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பி.யுமான ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு கேள்வி எழுப்பிய அவர் மேலும் கூறுகையில், உகண்டா நாட்டுக்கு சபாநாயகருடன் நாங்கள் கடந்த வாரம் சென்றிருந்தோம். அதேபோன்று எதிர்வரும் 18ஆம் திகதி உகண்டாவில் அணிசேரா நாடுகளின் தலைவர்களின் மாநாடு இடம்பெறவுள்ளது.

தொடர்ச்சி P2

# கறுப்பு ஆடையில் எதிரணியினர்



புதிய வருடத்தில் பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (09) முதன் முதலாக கூடிய நிலையில், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.க்கள் கறுப்பு ஆடையுடன் சபைக்கு வந்தனர்.

தொடர்ச்சி P2

# செங்கடலுக்கு கப்பல் செல்லும்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய செங்கடல் மற்றும் அதனை அண்மித்த பிராந்தியத்திற்கு இலங்கை கடற்படையின் கப்பல்களை அனுப்பிவைக்க தயார் என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த கப்பல்கள் ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக அமெரிக்கா தலைமையில் முன்னெடுக்கப்படும் Prosperity Guardian நடவடிக்கையில் இணைக்கப்படவுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர், கேப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



# ‘குரல்பதிவு’ பிக்குகளால்
## தவறாகவே பார்க்கின்றனர்




தேசிய நல்லிணக்கத்துக்கு பௌத்த பிக்குகள் எதிராக உள்ளார்கள் என்ற தவறான நிலைப்பாடு சர்வதேசத்தின் மத்தியில் உள்ளது. அனைத்தையும் எதிர்க்கும் ஒருசில “குரல்பதிவு” பிக்குகளால் ஒட்டுமொத்த பிக்குகளும் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கப்படுவதக்க கவலை தெரிவித்த நீதி,

தொடர்ச்சி P2

## சிறப்புரிமைகளை மீறினால்
# மாதம் இடைநிறுத்தும்

பாராளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவினால் எவரேனும் உறுப்பினர் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள குற்றப்பத்திரிகை ஒன்றில், வெவ்வேறான இரண்டு தவறுகள் அல்லது அதிலும் கூடிய ஒரு எண்ணிக்கைக்கு,

தொடர்ச்சி P2




File Photo © Parliament of Sri Lanka.

# 10 இலட்சம் மின் விநியோகம் துண்டிப்பு

நாட்டிலுள்ள 7,603,923 மின்பாவனையாளர்களில் மின்கட்டணம் செலுத்தாத 1,064,400 மின்பாவனையாளர்களின் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# பொருட்களின் விலைகள் எகிறின

பெறுமதிசேர் வரி (வற்) அதிகரிப்பால், பல அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ள நிலையில், உருளைக்கிழங்கு, பருப்பு, சீனி, வெங்காயம், கோதுமை மா மற்றும் சில அரிசி வகைகளின் விலைகள் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வற் உயர்வுக்கு முன்னர் 300 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கிராம் பருப்பின் விலை தற்போது 350 ரூபாவாக அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2




# ‘TIN’க்கு தனி கருமபீடங்கள்


18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வரி செலுத்துவோர் அடையாள எண்ணை (TIN) வழங்குவதற்காக அனைத்து பிரதேச செயலகங்களிலும் தனியான கருமபீடங்களை திறக்குமாறு நிதி அமைச்சு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

மேலும், அரச வங்கிகள், ஆட்கள் பதிவு திணைக்களம், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் போன்ற இடங்களில் இது தொடர்பான கருமபீடங்களை திறக்க ஏற்பாடு செய்யுமாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய பணிப்புரை விடுத்துள்ளார்.

TIN வழங்குவது தொடர்பான நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களம், அரச நிர்வாகம் மற்றும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிலையம் (ICTA) ஆகியவற்றின் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.

அனைத்து பிரதேச செயலகங்களும் பொதுமக்களுக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# கறுப்பு ஆடையில் எதிரணியினர்



பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (09) காலை 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது இதன்போதே அரசினால் அதிகரிக்கப்பட்டுள்ள ''வற்'' அதிகரிப்பு மற்றும் மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எம்.பி.க்கள் கறுப்பு ஆடையுடன் சபைக்கு வந்தனர்.

# புதிய எம்.பி வாசல திலக்க

அவருக்கு அடுத்த இடத்தில், 31,307 வாக்குகளை பெற்று நயன வாசலதிலக்க உள்ளார்.

பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றைச் செவ்வாய்க்கிழமை (09) விடுத்த சமிந்த விஜேசிறி, தன்னுடைய எம்.பி பதவியை இராஜினாமா செய்தமை குறிப்பிடத்தக்கது.

வெற்றிடமாக இருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி பதவிக்கு, நியமிக்க வேண்டிய நயன வாசல திலக்கவின் பெயர், தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும். வர்த்தமான அறிவித்தல் வெளியானதன் பின்னர், புதிய எம்.பியாக நயன வாசல சத்தியப்பிரமாணம் செய்துகொள்வார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

# நூற்றாண்டு நினைவுதினம்

சேர்.பொன். அருணாச்சலத்தின் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்திய ஜனாதிபதி, அவரது குடும்பத்தாருடனும் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

சேர்.பொன்.அருணாச்சலம் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்று அல்லாமல் இலங்கையர் என்ற எண்ணக்கரு தொடர்பில் அதிக நம்பிக்கை கொண்டிருந்ததை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அந்த கொள்கையைப் பின்பற்றிய டீ.எஸ்.சேனநாயக்க அனைத்து இனத்தவரையும். ஏனையோரையும் ஒன்றிணைத்துக்கொண்டு நாட்டின் முன்னேற்றத்திற்கு வழிவகுத்தார் என்றும் தெரிவித்தார்.

# “கப்பலை எப்படி அனுப்ப முடியும்”



அந்த மாநாட்டுக்கு ஜனாதிபதியும் செல்லவுள்ளார்.

அணிசேரா நாடுகளின் கொள்கை என்ன? அணிசேரா நாட்டுக்கொள்கையைப் பின்பற்றும் நாடாக இலங்கை உள்ளது. ஆனால் தற்போது அமெரிக்க விசுவாசமா எமது அணிசேரா கொள்கை? அமெரிக்காவின், இஸ்ரேலின் தேவைக்கு மேலும் சில நாடுகளுடன் இணைந்து ஹவுதி கிளர்ச்சியாளர்களை அடக்குவதற்கு இலங்கை கடற்படையை அனுப்புவதாக இருந்தால், ஜனாதிபதி எதற்காக அணிசேரா நாடுகளின் தலைவர்கள் நாட்டில் கலந்துகொள்ள உகண்டா செல்ல வேண்டும்?

எனவே இலங்கை அணிசேரா கொள்கையைப் பின்பற்றும் நிலையில் அமெரிக்காவுக்கு விசுவாசமாக இருந்து, ஹவுதி கிளர்ச்சியாளர்களை அடக்குவதற்கு அமெரிக்காவின் தேவைக்காகச் செயற்பட்டு “ஜோக்கர்”நாடாகிவிடக்கூடாது என்றார்.

# ‘குரல்பதிவு’ பிக்குகளால் தவறாகவே பார்க்கின்றனர்

சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ முன்பு கிராமங்களில் இன நல்லிணக்கம் சிறந்த முறையிலிருந்தது. ஆனால் தற்போது கிராமங்கள் இனம்,மதம் மற்றும் அரசியல் ரீதியில் பிளவுப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) தேசிய ஒற்றுமைக்கும், நல்லிணத்துக்குமான அலுவலகச் சட்டமூலம், தேசிய நீரளவை சட்டமூலம் என்பனவற்றைச் சமர்ப்பித்து உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்

தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் என்பது இன்று, நேற்று ஆரம்பமான பேசுபொருளல்ல, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கவின் ஆட்சியில் யுத்த சூழலின்போது, இந்த அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அப்போது நிர்வாக மட்டத்தில் மாத்திரம் அந்தஸ்த்து வழங்கப்பட்டது.தற்போது அரசியலமைப்பின் ஊடாக அங்கீகாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமூக கட்டமைப்பில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை ஸ்தாபிப்பதுடன் பாராளுமன்றத்திலும் ஒற்றுமை,நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த வேண்டும். ஒருசிலரது முறையற்ற செயற்பாடுகளினால் 225 எம்.பி.க்களையும் மக்கள் வெறுக்கிறார்கள். இந்நிலைமையை மாற்ற வேண்டும்.

முன்பு கிராமங்களில் இன நல்லிணக்கம் சிறந்த முறையிலிருந்தது. ஆனால் தற்போது கிராமங்கள் இனம்,மதம் மற்றும் அரசியல் ரீதியில் பிளவுபட்டுள்ளன .பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் தேசிய நல்லிணக்கத்தை ஸ்தாபிப்பது குறித்துப் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் அண்மையில் ஜனாதிபதி உட்பட மத தலைவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன . ஒரு தரப்பினர் இதற்குச் சாதகமாகப் பேசியுள்ள நிலையில் பிறிதொரு தரப்பினர் விமர்சிக்கின்றனர் என்றார்.

# செங்கடலுக்கு கப்பல் செல்லும்

கப்பலை அனுப்பிவைக்க வேண்டிய திகதி தொடர்பில் இதுவரை அறிவிக்கப்படவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

செங்கடலை அண்மித்த அரபுக்கடல், கல்ஃப் கடல் உள்ளிட்ட பிராந்தியம் முழுவதையும் உள்ளடக்கும் வகையில் *Prosperity Guardian* நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகக் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# மாதம் இடைநிறுத்தம்

உறுப்பினர் ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், மூன்று மாதகால உச்ச வரம்பிற்கு உட்பட்டதாக இடைநிறுத்துவதற்கு பிரேரிக்கப்பட்டிருப்பதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அவேர்தன அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) சபாநாயகர் அறிவிப்பின் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் 28 ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சேவை இடைநிறுத்தமானது ஒரு மாதத்தை விஞ்சிய ஒரு காலப்பகுதிக்காக, அரசியலமைப்பின் 66(ஊ) உறுப்புரைக்கு அமைய மூன்று மாதகால உச்ச வரம்பிற்கு உட்பட்டதாக விதிக்கப்படலாமென பிரேரிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவினால் எவரேனும் உறுப்பினர் தொடர்பில் வழங்கப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையொன்றில், வெவ்வேறான இரண்டு தவறுகள் அல்லது அதிலும் கூடிய ஒரு எண்ணிக்கைக்காக, ஒன்றுக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுகள் வெவ்வேறாகக் குறிப்பிடப்பட்டுள்ளபோது, அத்துடன் சம்பந்தப்பட்ட உறுப்பினர் அத்தகைய குற்றப்பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகளுக்குக் குற்றவாளியாக காணப்பட்டுள்ளவிடத்து, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) சட்டத்தின் 28ஆம் பிரிவுக்கு அமைய, விதிக்கப்படக்கூடிய அதியுச்ச தண்டனை பற்றி சட்டத்துறை தலைமை அதிபதியின் அபிப்பிராயம் வினவப்பட்டது. அதன் அடிப்படையில், பிரிவுகளின் ஏற்பாடுகளைப் பின்பற்றி தண்டனை விதிக்கப்படலாமென அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றார்.

# 10 இலட்சம் மின் விநியோகம் துண்டிப்பு

ஊடக காட்சிப்படுத்தலில் ஜே .வி.பி.தலைவர் அநுர குமார திஸாநாயக்க வுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது எனவும் கூறினார்

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச மின்கட்டண அதிகரிப்பு, மின் விநியோகத்துண்டிப்பு தொடர்பில் எழுப்பி, கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் வீட்டு மின்பாவனையாளர்கள் உட்பட 7,603,923 மின்பாவனையாளர்கள் அரச மற்றும் தனியார் மின் விநியோக கட்டமைப்பின் ஊடாக மின்சாரத்தைப் பெற்றுக்கொள்கிறார்கள். பொருளாதார பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களினால் மின்கட்டணம் செலுத்தாத 1,064,400 மின்பாவனையாளர்களின் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மின்கட்டண திருத்தம் தொடர்பான யோசனை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்படவில்லை. எதிர்வரும் வாரமளவில் யோசனை முன்வைக்கப்படும். பொது மக்களின் கருத்து கோரலுடன் மின்கட்டண திருத்தம் தொடர்பில் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு இறுதி தீர்மானத்தை எடுக்கும்.

மின்கட்டணத்தைத் திருத்தம் செய்யும் தீர்மானம் கடந்த டிசெம்பர் 5ஆம் திகதி அமைச்சரவை அங்கிகாரத்துடன் எடுக்கப்பட்டது. கட்டண திருத்தத்துக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், மின்கட்டண அதிகரிப்பு தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்துள்ளார். இது ஓர் ஊடக காட்சிப்படுத்தல் ஊடக காட்சிப்படுத்தலில் ஜே.வி.பி.தலைவர் அநுர குமார திஸாநாய க்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது என்றார்.

# பொருட்களின் விலைகள் எகிறின

மேலும் சில பகுதிகளில் 290 ரூபாவாக இருந்த ஒரு கிலோ கிராம் சீனியின் விலை 320 ரூபாவாகவும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

‘வற்’ என்ற போர்வையில் சில வர்த்தகர்கள் கட்டுப்பாடற்ற வகையில் பொருட்களின் விலைகளை அதிகரித்துள்ளதாக நுகர்வோர்கள் தெரிவிக்கின்றனர்.

# ‘TIN’க்கு தனி கருமபீடங்கள்

முன்பு செய்தது போல், எரிபொருளுக்கான QR குறியீடுகளை வழங்குவதைப் போன்றே, TIN ஐ வழங்குவதற்கான திறமையான செயல்முறையை எதிர்பார்ப்பதாக அமைச்சர் கூறினார்.

தற்போதைய ஒன்லைன் பதிவு விண்ணப்பப் படிவத்தைச் சுருக்கவும், ஐந்து நாட்களுக்குள் எண்ணை வழங்குவதற்கான நேரத்தை விரைவுபடுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

# கோதுமை மா விலை உயருமா?

நாட்டிற்குத் தேவையான கோதுமை மாவை வழங்கும் இரண்டு முக்கிய நிறுவனங்களான செரண்டிப் ஃப்ளோர் மில்ஸ் (தனியார்) நிறுவனம் மற்றும் ப்ரைமா சிலோன் (தனியார்) நிறுவனம் - ஆறு மாதங்களுக்கு போதுமான கோதுமை தானியத்தை தாங்கள் களஞ்சியப்படுத்தியுள்ளதாகவும் எனவே எதிர்காலத்தில் உடனடி விலையுயர்வு இல்லாமல் விலை ஸ்திரத்தன்மையை உறுதி செய்ய முடியும் என தெரிவித்துள்ளன.

செங்கடலில் பகுதியில் நிலவும் பதற்றம் காரணமாகக் கப்பல் போக்குவரத்து கட்டணத்திற்குக் கூடுதல் கட்டணம் செலுத்த வேண்டும் என்று கோதுமை மா இறக்குமதியாளர்கள் கூறியதை அடுத்து உள்நாட்டில் கோதுமை தானியத்தை இறக்குமதி செய்யும் இரண்டு முக்கிய வழங்குநர்கள் இந்த அறிவிப்பை வெளியிட்டனர்.

விலையை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்படும் என இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எவ்வாறாயினும், உள்ளூர் சந்தையில் விநியோகத்தின் பெரும்பகுதிக்குப் பொறுப்பான இரண்டு நிறுவனங்களும் சமீபத்திய நெருக்கடியின் போதும் கோதுமை தானியங்கள் மற்றும் கோதுமை மாவை போதுமான அளவு கையிருப்பில் வைத்திருப்பதன் மூலம் நாட்டின் உணவுப் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிப்பதாகக் கூறின.

“செங்கடலில் ஏற்பட்டுள்ள பதற்றம் காரணமாக உலகளாவிய கப்பல் வழித்தடங்களில் ஏற்பட்டுள்ள சமீபத்திய இடையூறுகள் மற்றும் அதன் விளைவாகச் சரக்குக் கட்டணங்கள் மற்றும் காப்புறுதி கட்டணங்கள் அதிகரிப்பதை ஒப்புக் கொள்ளும் அதேவேளையில், இந்த நிறுவனங்கள் அனைத்து இலங்கையர்களுக்கும் உணவுப் பாதுகாப்பையும் கோதுமை மாவின் விலை ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்த விரும்புகின்றன.

# ஒக்டோபருக்குள் தேர்தல் நடைபெறும்

ஜனாதிபதித் தேர்தல் அல்லது பொதுத் தேர்தல் ஆகிய இரண்டு பிரதான தேர்தல்களில் ஒன்றை இந்த வருடம் ஒக்டோபர் மாதத்திற்குள் நடத்த அரசாங்கம் நிச்சயமாகத் தீர்மானித்துள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நீண்ட இராஜதந்திர சேவைக்குப் பின்னர் இலங்கையை விட்டு வெளியேறும் இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் அப்பிள்டனைச் சந்தித்த போதே விவசாய அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.“இது தேர்தல் ஆண்டு. 2024 இன்னும் பன்னிரண்டு மாதங்கள் இல்லை என்று எனது அமைச்சக அதிகாரிகளுக்கு நான் அறிவுறுத்தினேன்.

இந்த வருடம் ஒக்டோபர் மாதத்துடன் நிறைவடைவதைக் கருத்தில் கொண்டு அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர, நியூசிலாந்து உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.





# ஷேக் ஹஸீனாவை நேரடியாக வாழ்த்தினார்

பங்களாதேஷ் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்று ஐந்தாவது முறையாக பிரதமராக தெரிவாகியுள்ள ஷேக் ஹஸீனாவை மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவருமான அலிஸாஹிர் மௌலானா, டாக்காவில் அமைந்துள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் திங்கட்கிழமை (08) நேரடியாக சந்தித்து வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, பங்களாதேஷ் மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் தனது உறுதியான நிலைப்பாட்டை பிரதமர் ஹசீனா வெளிப்படுத்தியுள்ளார்.

இச்சந்திப்பின்போது, பங்களாதேஷின் செழுமைக்கு மட்டுமல்ல, அண்டை நாடுகளுடன் அர்த்தமுள்ள ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் பிரதமர் ஹசீனாவின் அர்ப்பணிப்பானது மிகவும் ஊக்கமளிக்கிறது எனவும் அத்தகைய திறமை மற்றும் அர்ப்பணிப்பு கொண்ட தலைமைத்துவத்தைக் காணும் வாய்ப்பிற்காக தான் பெருமிதம் கொண்டவனாகவும் பிரதமர் ஹசீனாவின் வழிகாட்டுதலின் கீழ் தொடரும் முயற்சிகளின் சாதகமான பெறுபேறுகளைக் காண ஆவலுடன் காத்திருப்பதாகவும் அலிஸாஹிர் மௌலானா எம்.பி. தெரிவித்துள்ளார்.

"நிரந்தர வைத்திய அத்தியட்சர்

# விரைவில் நியமனம்"

வவுனியா-செட்டிகுளம் ஆதார வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அத்தியட்சர் விரைவில் நியமனம் செய்யப்படுவதுடன், இரத்த, சிறுநீர் பரிசோதனைக்கான இயந்திரங்களும் வழங்கப்படுமென சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன உறுதியளித்துள்ளார்.

புதிய வருடத்தில் பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (09) முதன் முதலாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய நிலையில், இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட எம்.பி.யான சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இந்த உறுதி மொழியை அமைச்சர் வழங்கியுள்ளார்.

சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. தனது கேள்வியில், வவுனியா-செட்டிகுளம் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சர் இல்லை. திடீர் மரண விசாரணை அதிகாரி இல்லை. இரத்த, சிறுநீர் பரிசோதனைக்கான இயந்திரங்கள், வசதிகள் இல்லை. இதனால் இப்பகுதி மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர். 40 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள வவுனியா வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியுள்ளது. இதனால் பண, நேர செலவு ஏற்படுகின்றது. அத்துடன், இந்த வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அத்தியட்சர் இல்லை. சட்ட வைத்தியதிகாரி, திடீர் மரணவிசாரணை அதிகாரி இல்லை. பல வார்ட்டுகள் பழைய கட்டிடத்திலேயே இயங்குகின்றன எனவே இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.



இதற்கு சுகாதார அமைச்சர் ரமேஷ் புத்திரன பதிலளிக்கும் போது, வவுனியா செட்டிகுளம் ஆதார வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அத்தியட்சர் விரைவில் நியமனம் செய்யப்படுவதுடன் இரத்த, சிறுநீர் பரிசோதனைக்கான இயந்திரங்களும் வழங்கப்படும் திடீர் மரண விசாரணை அதிகாரியை உடனடியாக நியமிக்க முடியாத நிலையுள்ளது. அத்துடன் தற்போதையை நிலையில், புதிய கட்டிடங்களையும் அமைக்க முடியாது என்றார்.

கடும் மழையால்

# மண் திட்டுகள் சரியும் அபாயம்

**கௌசல்யா**

மத்திய மலைநாட்டில் கடந்த இரண்டு நாட்களாக பெய்து வரும் கடும் மழையால் பெருந்தோட்ட தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் பண்ணையாளர்கள் அன்றாட பணிகளில் ஈடுபட முடியாதுள்ளதாகவும் தெரியவித்துள்ளனர்.

கடும் மழையால் மவுஸ்சாக்கலை மற்றும் காசல்ரீ, மேல் கொத்மலை கென்யோன், லக்சபான, நவலக்சபான, பொல்பிட்டிய, கலுகல விமலசுரேந்திர ஆகிய நீர்த் தேக்கங்களுக்கு நீர் மட்டம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில், மத்திய மலைநாட்டில் உள்ள அனைத்து நீர் நிலைகளில் நீர் மட்டம் அதிகரித்துள்ளதால் நீராட செல்வோர் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் முடிந்த வரை நீர் நிலைகளில் நீராட வேண்டாம் எனவும் நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபர் நந்தன கலபட தெரிவித்துள்ளார்.

அத்துடன், மத்திய மலைநாட்டில் மழை காரணமாக மண் திட்டுகள் சரியும் அபாயம் உள்ளதால் பாரிய மண் திட்டுகள் உள்ள பகுதிகளில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் நுவரெலியா மாவட்ட பொலிஸ் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.



# மழையில் திருட்டு; ஒன்று மட்டும் மீட்பு

**வி.சுகிர்தகுமார்**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கண்ணகி கிராமத்தில், வீடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் திங்கட்கிழமை (08) திருடப்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு திருடப்பட்ட மோட்டார் சைக்கிள்களில் ஒன்று அருகில் உள்ள வீதி ஓரத்தில் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளதுடன், பல்சர் ரக மோட்டார் சைக்கிள் திருடர்களால் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், கொள்ளையிடப்பட்ட மோட்டார் சைக்கிளில் ஒன்று இயங்க முடியாத நிலையில் கைவிடப்பட்டிருக்கலாம் என சந்தேகிப்பதாகக் கூறிய பொலிஸார், இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.



# வீட்டுக்குச் சேதம்: ஒருவர் சிக்கினார்

**எம்.றொசாந்த்**



யாழ்ப்பாணம்-சங்குவேலி பகுதியில் வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து தாக்குதல் நடத்தி, பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் திங்கட்கிழமை (08) கைது செய்யப்பட்டுள்ளார்.

சங்குவேலியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த கும்பலொன்று வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள், கதவுகள் என்பவற்றை உடைத்து சேதமாக்கி, வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 08 இலட்சம் ரூபாய் பெறுமதியான மோட்டார் சைக்கிளையும் தீயிட்டு கொளுத்தி, தப்பி சென்றுள்ள சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (07) இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வந்த பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞன் ஒருவரை கைது செய்துள்ளதுடன், ஏனையவர்களையும் அடையாளம் கண்டுள்ளதாகவும் அவர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

# படகு கவிழ்ந்தது மீனவர் தப்பினார்

**எம்.எஸ்.எம்.நூர்தீன்**



காத்தான்குடி - ஏத்துக்கால் கடற்கரையில் இருந்து மீனவர் ஒருவர் படகு ஒன்றில் மீன் பிடிப்பதற்காக திங்கட்கிழமை (08) அதிகாலை கடலுக்குச் சென்று மீண்டும் கரையை நோக்கி வரும்போது, கரையில் இருந்து சற்று தூரத்தில் குறித்த மீன்பிடிப் படகு கவிழ்ந்து மீனவர் கடலில் விழுந்துள்ளார்.

இதனைக்கண்ட கரையில் நின்ற மீனவர்கள், குறித்த மீனவரை காப்பாற்றியதுடன், மீன்பிடிப் படகையும் மீட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் மீன்பிடி படகுக்கு மற்றும் மீன் பிடி படகின் இயந்திரத்திற்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

## சிறு விளம்பரம்

எதுல்கோட்டே பிரதான வீதிக்கு அருகில் வீடு மற்றும் வியாபார பாவனைக்கு ஏற்ற கட்டிடம் நீண்ட கால குத்தகைக்கு. 3,500,000 - 5,000,000 தொடர்புக்கு 075-9123031

# "பொருளாதாரத்தை கட்டியெழுப்ப மத ஒற்றுமை அவசியம்"







பொருளாதாரத்தை கட்டியெழுப்ப மத ஒற்றுமை அவசியம் என வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநரின் ஒதுக்கீட்டின் கீழ், மத வழிபாட்டு தலங்களுக்கான அன்பளிப்புகளைக் கையளிக்கும் நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸினால் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை (09) நடைபெற்றபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில், நல்லூர் வடக்கு சந்திரசேகர பிள்ளையார் கோவில், ஆவரங்கால் சிவன் கோவில், யாழ்ப்பாணம் ஸ்ரீ நாகவிகாரை, இளவாலை புனித பிலிபேரிஸ் தேவாலயம் ஆகியவற்றுக்கான அன்பளிப்பு பொருட்கள் ஆளுநரால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், அங்கு வருகைதந்திருந்த மத குருமார்கள் மற்றும் ஆலய நிருவாகத்தினருடன் கலந்துரையாடியுள்ளார். இதன்போது, மதங்களிடையே பூசல் உருவாக இடமளிக்கக் கூடாது எனவும் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப மத ஒற்றுமை அவசியம் எனவும் கூறியுள்ளார்.



# எடுக்கும் பிச்சையை வருத்தாமல் எடுக்க வழி சமைக்கவும்

பொருளாதார நெருக்கடி, அதிகமான வரி அறவீடு, பொருட்களின் விலை அதிகரிப்பு, வரவை விஞ்சும் செலவு, மேலதிக வருமானம் இன்மை உள்ளிட்ட காரணங்களால், நாட்டின் மொத்த சனத்தொகையில், 22 சதவீதமானோர் கடனாளியாகியுள்ளனர்.

அத்துடன், 60.5 சதவீதமான குடும்பங்கள் மாத வருமானத்தை இழந்துள்ளனர்.

இதற்கிடையே கண்களைக் கட்டி இருட்டில் விட்டதைப் போல, மின்னிணைப்புகளைத் துண்டித்து, மின்கட்டணம் செலுத்தாத 10 இலட்சத்து 64 ஆயிரத்து 400 மின் பாவனையாளர்களை, கண்கள் இருந்தும் குருடர்களாக்கி விட்டது. ஆனால், பதவி நிலைகளில் இருக்கும் ஒரு சிலரும், ஒரு சில மக்கள் பிரதிநிதிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை பகிரங்கப்படுத்தப்படவில்லை.

மொத்த சனத்தொகையில் 22 சதவீதமானோர் கடனாளியாகியுள்ளனர். இதில், நகர்ப்புறத்தைச் சேர்ந்த 24.3 சதவீதமான குடும்பங்களும், கிராமப் புறங்களைச் சேர்ந்த 20 சதவீதமான குடும்பங்களும், பெருந்தோட்ட பகுதிகளைச் சேர்ந்த 42.8 சதவீதமான குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

நெருக்கடியினால் பாதிப்புக்கு மத்தியில் 60.5 சதவீதமான குடும்பங்களின் மாத வருமானம் இழக்கப்பட்டுள்ள நிலையில், 91 சதவீதமானோரின் மாத செலவுகள் சடுதியாக உயர்வடைந்துள்ளன. அத்துடன், தொழிலின்மை 14.2 சதவீதமாக உயர்வடைந்துள்ளது.

இதற்கிடையே, 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் வரி செலுத்துவோருக்கான அடையாள எண்ணை (TIN) பெற்றுக்கொள்ளவேண்டும். இல்லையேல் 50 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்படுமென எச்சரித்துள்ளது.

இல்லையேல், வங்கிகளில் கணக்குகளை திறக்கும் போதும், கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான திட்டங்களுக்கு அனுமதியை பெற்றுக்கொள்ளும் போதும், வாகனங்களை பதிவுச் செய்யும் போதும், வாகன வருமான பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் போதும் சிக்கல்கள் ஏற்படுமென அறிவுறுத்தியுள்ளது.

இவற்றுக்கெல்லாம் அஞ்சி, இணையத்தளத்தின் ஊடாக TIN எண்ணை பெற்றுக்கொள்வதில், பலருக்கும் விளக்கமில்லை. தமிழ்,சிங்கள மொழிகளில் நிரப்புவதற்கான வாய்ப்புகள் இருந்தாலும், ஆங்கிலத்தில் மட்டுமே நிரப்புவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இதனால், ஆங்கிலம் தெரியாதவர்கள் கடும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

வரி ஏய்ப்போரைக் கண்டறியவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. எனினும், வற் வரியை அதிகரித்து சாதாரண மக்கள் மீது பெரும் சுமையை சுமத்தியிருக்கும் அரசாங்கம், மக்களிடத்தில் பிச்சை எடுத்து ஜீவியம் நடத்துவதற்கு முயல்கின்றது என்று பலரும் குற்றஞ்சாட்டுகின்றனர்.

ஒருபுறம் வயிற்றுப் பசி, மறுபக்கத்தில் TIN எண்ணைப் பெறுவதில் சிரமங்களுக்கு முகங்கொடுக்கும் சாதாரண மக்கள் பித்துப்பிடித்து நிற்கின்றனர். ஆகையால், ஏதாவது நடமாடும் சேவைகளைச் செய்து, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வழிசமைக்க வேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

பெப்ரவரி 1ஆம் திகதிக்கு முன்னர், TIN எண்ணைப் பெற்றுக்கொள்ளாதவர்களுக்குத் தண்டம் விதிக்க அவசரம் காண்பிக்கும் அரசாங்கம், அப்பாவி மக்களுக்கு இலகுவான நடைமுறையை அறிமுகப்படுத்துவதற்குத் தவறிவிட்டது. கிராம சேவர்கள் பிரிவுக்கு ஒருவரென நியமித்து இந்தத் திட்டத்தை இலகு படுத்தலாம் என்பதே எமது தாழ்மையான கருத்தாகும்.




## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

வெறுப்பு உணர்வு சந்தோஷத்துக்கு வேட்டு. எந்த நேரமும் முகத்தைக் கோணலாக வைத்தபடி, எதனை யோ இழந்தபடி இருப்பவர்களை எவர்தான் ரசித்து மகிழப் போகின்றார்கள்.

வாழக்கையை ரசிக்கத் தெரியாதவர்கள் எல்லாவற்றையும் கைவிட்டது போல் நடப்பதுண்டு. தொடர்ந்து துன்பங்கள், தோல்வி, நினைத்தவை நடக்காவிட்டால் அதிலிருந்து மீளும் வரை சோக இருளில், தங்கள் உருவத்துடன் வெறுத்து உலர்ந்த நிலையில் இருப்பது துணிச்சலற்ற நிலையைக் காட்டுகின்றது.

அவரவர் கஷ்டங்கள் அவரவர்களுக்கே தெரியும் என்பார்கள். ஆனால், கஷ்ட, நஷ்டங்களைச் சந்திக்காதவர்கள் எவருண்டு.

பிரச்சினைகளை அப்படியே நிலையாக வைத்தபடி, அடுத்து உடன் எழுந்து களையாமல் இருப்பது தன்னைத்தான் சிதைப்பதாக அமையும். பழையதைத் துறந்து, புது வழி தேடுதலைச் சிரமம் எனக் கருதலாகாது. பலவீனத்துடன் வாழ்வது எழுச்சியைக் களைவது போலாகும். எழுவது சிரமம் அல்ல. சும்மா இருப்பதே கடினம். செயல்படுவது மேல்.

நன்றி: பருத்தியூர் பால வயிரவநாதன்

# தமிழ் பொது வேட்பாளர் தீர்வுக்கு உதவுவாரா?



ஏம்.எஸ்.எம். ஐயூப்

தமிழ் பொது ஜனாதிபதி வேட்பாளர் என்ற எண்ணக்கரு வட மாகாணத்தில் பேசுபொருளாக மாறி வருகிறது. அதற்கு ஆதரவாகவும் எதிராகவும் பல அரசியல் கட்சிகள் கருத்து தெரிவித்து வருகின்றனர். சிலர் பொதுவான உடன்பாடு ஏற்படு முன்னரே போட்டியிடவும் தயாராகி வருகின்றனர்.

ஆயினும் இலங்கையில் முதலாவது தமிழ் ஜனாதிபதியைத் தெரிவு செய்ய முடியும் என்ற எண்ணத்தில் எவரும் இவ்விடயத்தில் கருத்து தெரிவிக்கவில்லை. தமிழ் வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்று கூறுவோரும் தமிழ் வேட்பாளர் ஒருவர் வெற்றி பெறப் போவதில்லை என்ற நிலையிலேயே தமது கருத்தைத் தெரிவித்து வருகின்றனர்.

தமிழ் வேட்பாளர் என்ற கருத்தை ஆதரிப்போரும், எதிர்ப்போரும் உடன்படும் பொதுவான ஒரு நிலைப்பாடு இருக்கிறது. தமிழ் மக்களுக்குச் சிங்களத் தலைவர்கள் மீது எவ்வித நம்பிக்கையும் இல்லை என்பதிலேயே அவர்கள் உடன்படுகின்றனர்.

ஒரு வகையில் விசித்திரமான விடயம் என்னவென்றால், சிங்களத் தலைவர்களின் மீது நம்பிக்கை இல்லை என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டத் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்று ஒரு சாரார் கூறும்போது, மற்றொரு சாரார் அதனையே உலகுக்கு எடுத்துக் காட்டுவதற்காக ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் வாதிடுகின்றனர்.

வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடுகளைப் பார்க்கும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் அரசியல் கூட்டணியொன்று இப்போது நாட்டில் இல்லை. ஏனெனில், இலங்கை தமிழரசுக் கட்சியைத் தவிர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த ஏனைய கட்சிகள் கூட்டமைப்பிலிருந்து விலகிச் செயற்படுகின்றன.

கூட்டமைப்பில் இருந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்), எப்போதோ கூட்டமைப்பிலிருந்து விலகிச் செயற்பட்டு வருகிறது. அண்மைக்காலம் வரை கூட்டமைபபில் இருந்த தமிழீழ விடுதலை இயக்கம் (டெலோ), தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளோட்) ஆகிய கட்சிகளும் இப்போது ஈ.பி.ஆர்.எல்.எப், தமிழ்த் தேசிய கட்சி மற்றும் ஜனநாயக போராளிகள் ஆகியவற்றுடன் இணைந்து ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி என்ற பெயரில் செயற்படுகின்றன.

இந்த ஐந்து கட்சி கூட்டணியே இவ்வருட இறுதியில் நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறது. அதேவேளை, தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வட மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் அக்கருத்தை ஆதரிப்பது மட்டுமல்லாது, தமிழ் பொது வேட்பாளராகப் போட்டியிடவும் தயாராக இருக்கிறார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் ஊடக பேச்சாளரான ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் கடந்த டிசம்பர் 28ஆம் திகதி வெளியிட்டு இருந்த அறிக்கையொன்றில், தமது நிலைப்பாட்டை விளக்கியிருந்தார். இதுவரைகாலமும் தமிழ் அரசியல் தலைமைகள், சிங்கள தரப்புக்கள் அல்லது அரச தரப்பின் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக எதிர்வினை ஆற்றி வந்துள்ளதே தவிர, தமிழர் தரப்பினரின் அபிலாஷைகளுக்கு ஏற்றவாறு சிங்கள தலைமைகளை மாற்ற முடியவில்லை. ஆனால், இந்த ஜனாதிபதித் தேர்தல் ஏற்படுத்தியுள்ள சாதகமான சூழ்நிலையைத் தமிழ் மக்கள் ஒன்றிணைந்து தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான அனுகூலமான சூழலாக மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும் என அவர் அதில் கூறியிருக்கிறார்.

இன்றைய அரசியல் சூழ்நிலையில், சிங்கள பெரும்பான்மை வாக்குகள் சிதறக்கூடிய நிலை தோன்றியுள்ளதால் எந்தவொரு வேட்பாளரும் தனித்து நின்று 50 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக்கொள்வது கடினமாக இருக்கும். இந்நிலையில், தமிழ் மக்கள் தமக்கு இருக்கும் ஆறு இலட்சத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பேரம் பேசும் வாக்குகளாக மாற்றிக்கொள்வதற்கு முயற்சி செய்வதன் மூலம் இவர்களிடமிருந்து சில உரிமைகளையாவது பெற்றுக்கொள்வதற்கு முயற்சிக்கலாம் என்றும் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களை எமது நிகழ்ச்சி நிரலை நோக்கி வரவழைக்க முடியும் என்றும் அவர் மேலும் கூறுகிறார்.

தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதில் அர்த்தம் இல்லை என்றும் அது பாதகமானது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமை தாங்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அரசாங்கத்தில் இணைந்து செயற்படும் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் போன்றோரும் கூறி வருகின்றனர்.

இந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் ஒரு நிலைப்பாட்டை எடுக்காவிட்டாலும் தமக்குக் கிடைக்காத தமிழ் வாக்குகள் தமது போட்டியாளர்களிடம் சென்றடையாமல் இருக்கத் தமிழ் வேட்பாளர் என்ற ஆலோசனையின் பின்னால் ரணில் விக்ரமசிங்க இருக்கலாம் என்று பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் ராசமாணிக்கம் கூறியிருந்தார். அது நல்ல வாதமாக இருந்தாலும், உண்மையாக இருக்க சாத்தியங்கள் குறைவாகவே தெரிகிறது.

சிங்கள தலைவர்கள் மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போனமை ஒன்றும் நியாயமற்ற விடயம் அல்ல. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 'தேர்ட்டீன் பிளஸ்' என்று எத்தனை முறை கூறியிருப்பாரா? மனித உரிமை மீறல்களைப் பற்றி விசாரிக்க எத்தனை ஆணைக்குழுக்களை நியமித்தார்.

அத்தனையும் போலி நாடகம் என்பது அவற்றை அவர் நியமிக்கும்போதே தெளிவாகத் தெரிய இருந்தது. இறுதியில் அவர் நியமித்த ஆணைக்குழுக்களின் பரிந்துரைகளை ஆராய்ந்து பரிந்துரை சமர்ப்பிக்க அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ மற்றோர் ஆணைக்குழுவை நியமித்தார். இறுதி விளைவு என்ன?

இலங்கை அரச தலைவர்களில் இனவாதத்தில் குறைந்தவர் ரணில் விக்ரமசிங்க என்ற விக்னேஸ்வரனின் கூற்று ஓரளவுக்கு உண்மை தான். ஆனால், அவர் கடந்த சுமார் ஒன்றரை ஆண்டுகளாக இனப் பிரச்சினை விடயத்தில் எத்தனை முறை தமது நிலைபாடுகளை மாற்றிக்கொண்டார்?

2023 சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதாகக் கூறினார். அந்நாள் வருமுன்னரே நிரந்தர தீர்வு ஒருபுறமிருக்க, 13ஆவது திருத்தத்தை இரண்டு வருடங்களில் அமுல்படுத்துவதாகக் கூறினார். பின்னர் 2023ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதாக மீண்டும் கூறினார். இரண்டு மாதங்கள் கழித்து மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரம் வழங்காமல் 13ஆவது திருத்தத்தைப் பூரணமாக அமுலாக்கப் போவதாகக் கூறினார். இதனையடுத்து, அடுத்த பொதுத் தேர்தலின் பின்னர் ஒரு வருடத்துக்குள் 13ஆவது திருத்தத்தை அமுலாக்குவதாக கூறினார். இறுதியில் வடக்கே சென்று 13ஆவது திருத்தம் பூரணமாக அமுலாக்காவிடாலும் பொருளாதார அபிவிருத்திக்காக மாகாண சபைகளுக்கு இப்போது இருக்கும் அதிகாரம் போதுமானது என்றார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தினாலும் இல்லாவிட்டாலும் தேர்தலைப் பகிஷ்கரித்தாலும் தென்பகுதி அரசியல்வாதிகள் தமிழ் தலைவர்களின் கோரிக்கைகள் விடயத்தில் ஒருபோதும் சத்தகமாக தமது முடிவுகளை மாற்றிக்கொள்வதில்லை, தென்பகுதி வேட்பாளர்கள் சரிசமமாக வாக்குகளைப் பெறும் நிலை ஏற்பட்டு ஒருவரும் சட்டப்படி தேவையான 50 வீத வாக்குகளைப் பெற முடியாத நிலை ஏற்பட்டால் அவர்கள் பிரேமசந்திரன் கூறுவது போல, தமிழ், முஸ்லிம் வாக்குகளை நாடி வரலாம்.

ரணிலின் வட பகுதி விஜயத்தின் நோக்கமும் அதுவாக இருக்கலாம்.

ஆனால், அவர்கள் ஒற்றையாட்சி முறையை நிராகரித்து, சமஷ்டி ஆட்சி முறையை ஏற்றுக்கொள்வார்களா? போர்க் கால மனித உரிமை மீறல்கள் தொடர்பாக முப்படையினருக்கு எதிராக விசாரணை நடத்த முன்வருவார்களா? வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீண்டும் இணைக்க முன்வருவார்களா? போர்க் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரை கண்டுபிடிக்க உண்மையாகவே நடவடிக்கை எடுப்பார்களா? தமிழ் வாக்குகளுக்காக அவர்கள் இவற்றைச் செய்ய முற்பட்டால், அவர்கள் சிங்கள வாக்குகளை இழந்து அதை விட பாரிய அரசியல் நெருக்கடியை எதிர்நோக்க நேரிடும்.

தமிழ் கட்சியொன்று இந்த கோரிக்கைகளிலிருந்து சிறிதளவேனும் கீழிறங்கி வந்தால், ஏனைய தமிழ் கட்சிகள் அதனைப் பாவித்து அரசியல் இலாபம் அடைய முற்படும். அதேபோல், இந்த விடயங்களில் தென்பகுதி நிலைப்பாட்டிலிருந்து ஏதாவது ஒரு தென் பகுதி கட்சி சிறிதளவேனும் கீழிறங்கி வந்தால், ஏனைய தென்பகுதி கட்சிகள் அதற்குத் துரோகி பட்டம் சூட்டி அரசியல் இலாபம் அடையும். இதுவே தற்போதைய நாட்டின் உண்மையான இனப் பிரச்சினையாகும்.

இங்கு ஒரு நடைமுறை பிரச்சினையும் இருக்கிறது. பிரேமசந்திரன் கூறுவதுபோல், பொது வேட்பாளரை நிறுத்தி சிங்களத் தலைவர்கள் தமிழர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தும் நிலையை உருவாக்கிவிட்டு அப்பேச்சுவார்த்தையின்போது, ஏதாவது இணக்கம் ஏற்பட்டால் தமிழர்கள் சம்பந்தப்பட்ட தென்பகுதி வேட்பாளரை அல்லது வேட்பாளர்களை ஆதரிக்கப் போகிறார்களா?

அல்லது இணக்கம் ஏற்பட்டதன் பின்னரும் தமிழர்கள் தமிழ் வேட்பாளருக்கே வாக்களிக்க வேண்டுமா? அது சரியா? அவ்வாறாயின் சிங்களத் தலைவர்கள் உடன்பட்ட விடயங்களை நிறைவேற்ற முன்வருவார்களா?

தமிழரசுக் கட்சி இந்த விடயத்தில் ஏன் மௌனமாக இருக்கிறது? அக்கட்சிக்கு இன்னமும் ரணில் விக்ரமசிங்க மீது நம்பிக்கை இருக்கிறதா? அல்லது இறுதி நேரத்தில் தமது கருத்தை ஏனைய தமிழ் கட்சிகளின் மீது திணிக்க அக்கட்சி நினைக்கிறதா? ஒரு வகையில் இந்த விடயத்தில் எந்த முடிவை எடுத்தாலும் நிலைமைகள் மாறாததால் இதைப் பெரிதாக அலட்டிக்கொள்வதில் அர்த்தமும் இல்லை தான். ஏதுவாக இருந்தாலும் ஒரு கூட்டு முடிவை எடுத்தால் எதிர்காலத்தில் அதில் ஒரு தாக்கம் இருக்கலாம் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மையாகும். அது சாத்தியமா?

## கடிதங்கள்

### திறப்பு விழா மட்டுமே இடம்பெற்றது

திருகோணமலை - கிண்ணியா பிரதேச செயலக பகுதிக்கு உட்பட்ட மஜீத் நகர் டீ சந்தியில் உள்ள மருத்து நிலையம் பல வருட காலமாக பாலடைந்த நிலையில் காணப்படுகின்றது.

குறித்த கட்டிடம் ஆரம்பிக்கப்பட்டு திறப்பு விழா மட்டுமே இடம்பெற்ற நிலையில் பயன்படுத்தப்படவில்லை. இதனால் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இப் பகுதியில் உள்ள கர்ப்பிணி தாய்மார்கள், குழந்தைகளுக்கான நிறை போசாக்கு தொடர்பிலான சிகிச்சைகளுக்கு பல கிலோ மீற்றர் தூரம் செல்ல வேண்டியுள்ளது.

இதனை கருத்திற் கொண்டு குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஊடாக மீள் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எம்.எம்.அஜீத் குறித்த கட்டிடத்தை பார்வையிட்டதுடன் எதிர்வரும் வாரமளவில் மீள் இயங்க செய்வதாக தெரிவித்துள்ளார்.

இதனை மீள் இயங்க செய்தால் மக்கள் இதன் மூலம் பயனடைவர். அத்துடன், பல கிலோ மீற்றர் தூரம் சென்று மருத்துவ தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும் மக்களுக்கு இது பெரும் நன்மையளிக்கும் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஏ.எச்.ஹஸ்பர்




## அமைச்சரவை முடிவுகள்

சில ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், திங்கட்கிழமை (08) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில...

### பல்கலைக்கழகத்தை நிறுவுதல்

புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள், தொழில்நுட்ப ரீதியான புத்தாக்கம் மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தி போன்ற தீர்மானம் மிக்க துறைகளில் தலைமைத்துவம் வகிக்கக்கூடிய தொழில் வல்லுநர்களை உருவாக்கும் நோக்கில் ஐக்கிய அமெரிக்காவின் புகழ்வாய்ந்த பல்கலைக்கழகத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொண்டு விஞ்ஞான தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகமொன்றை நிறுவுவதற்கான தேவை கண்டறியப்பட்டுள்ளது.

அவ்வாறான பல்கலைக்கழகத்தின் மூலம் அதிநவீன முறைகளைப் பயன்படுத்துவதற்கும், உலகளாவிய கற்கைகள் தொடர்புகளை மேம்படுத்துவதற்கும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான அடிப்படைச் சூழலை உருவாக்குவதற்கான இயலுமை கிடைக்கும்.

பல்கலைக்கழகங்களில் ஒரு பங்காண்மை பல்கலைக்கழகத்தைத் தெரிவு செய்து, குறித்த பல்கலைக்கழகத்துடன் ஒத்துழைத்து அரச தனியார் பங்குடமையாக மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள விஞ்ஞான தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### புதிய முதலீட்டு வலயங்கள்

ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக அரச மற்றும் தனியார் துறைகளுக்கிடையே ஒருங்கிணைந்த பொறிமுறையொன்றை உருவாக்க வேண்டிய தேவை 2022ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. அதற்கமைய, கீழ்க்காணும் வகையில் புதிய முதலீட்டு வலயத்தை அமைக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, வடமேல் மற்றும் தென்மாகாணத்தில் புதிய முதலீட்டு வலயத்தை அமைத்தல் மாங்குளம், பரந்தன் இரசாயனக் கம்பனி வளாகம் மற்றும் காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன வளாகத்தில் புதிய முதலீட்டு வலயங்களை அமைத்தல்

இரணவில மற்றும் திருகோணமலைப் பிரதேசங்களில் புதிய முதலீட்டு வலயங்களை அமைத்தல்

பிங்கிரிய மற்றும் அம்பாந்தோட்டை முதலீட்டு வலயங்களை மேலும் விரிவாக்கம் செய்தல்

உத்தேசிக்கப்பட்டுள்ள பொருளாதார வலயங்களை அமைப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப ரீதியான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய, பொருத்தமான அரச தனியார் பங்குடமை மாதிரியை அடிப்படையாகக் கொண்டு, குறித்த முதலீட்டு வலயங்களை அபிவிருத்தி செய்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### கசகஸ்தானில் தூதரகம்

கசகஸ்தான் மற்றும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திரத் தொடர்புகளை மேலும் விருத்தி செய்யும் நோக்கில் கசகஸ்தான் அஸ்தானாவில் இலங்கைக்கான தூதரகமொன்றை அமைப்பது பொருத்தமானதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

ஆசியாவின் இடைத் தொடர்பு மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் படிமுறைகள் தொடர்பான மாநாட்டுச் செயலகம் கசகஸ்தானில் அமைந்துள்ளமையும், இலங்கையானது குறித்த மாநாட்டின் உறுப்பு நாடாக இருப்பதாலும், மத்திய ஆசிய வலயத்துடன் இணைந்து கொள்வதற்கு இலங்கைக்குச் சிறந்ததொரு வாய்ப்பும் உருவாகியுள்ளது. அதனையடுத்தே கசகஸ்தானில் தூதரகத்தை நிறுவுவதற்கான யோசனைக்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### மீண்டும் திறந்து வைத்தல்

2021/2022 காலப்பகுதியில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ள கீழ்க்காணும் இலங்கைக்கான தூதுக்குழு அலுவலகங்களை மீண்டும் திறக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது.

(i) சைப்ரஷில் இலங்கைக்கான கொன்சியூலர் ஜெனரல் அலுவலகம், நிகோஷியா

(ii) ஈராக் பக்தாத்தில் இலங்கைக்கான தூதரகம்,

(iii) ஜேர்மனில் ப்ரன்பெட் இல் இலங்கைக்கான கொன்சியூலர் ஜெனரல் அலுவலகம்,

அதற்கமைய, மேற்குறிப்பிட்ட இலங்கைக்கான தூதுக்குழு அலுவலகங்களை மீண்டும் திறப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### ஒத்துழைப்பு வேலைத்திட்டம்

இலங்கையின் வெளிவிவகார அமைச்சுக்கும், டெர்க்மெனிஸ்தானின் வெளிவிவகார அமைச்சுக்கும் இடையில் 2023-2025 வரைக்குமான காலப்பகுதிக்கான ஒத்துழைப்பு வேலைத்திட்ட ஒப்பந்தமொன்றில் கையொப்பமிடுவதற்கு இரு தரப்பினரும் உடன்பாடு எட்டியுள்ளனர்.

இரு நாடுகளுக்கிடையில் அரசியல், பொருளாதார மற்றும் கலாசார ஒத்துழைப்புக்கள் உள்ளிட்ட இரு தரப்பினர்களுக்கிடையிலான தொடர்புகளை மேம்படுத்தல், பலப்படுத்தல் மற்றும் விரிவுபடுத்தல் போன்ற பரஸ்பர விடயங்கள் பற்றிக் கவனம் செலுத்துவதே வேலைத் திட்டத்தின் நோக்கங்களாக அமைகின்றன.

அதற்கமைய. இலங்கைக்கான வெளிவிவகார அமைச்சுக்கும் டெர்க்மெனிஸ்தானின் வெளிவிவகார அமைச்சுக்கும் இடையிலான உத்தேச ஒத்துழைப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### ஒப்பந்தத்தை வழங்கல்

ஜப்பான்,டோக்கியோ-நரீடா விமான நிலையத்தில் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் விமானச் சேவைகள் கம்பனியின் விமானங்களுக்கான தரையிறக்கச் சேவைகளை வழங்குவதற்குப் பொருத்தமான சேவை வழங்குநர்களைத் தெரிவு செய்வதற்காக மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச போட்டி விலைமுறி முறைமையைக் கையாண்டு விலைமுறிகள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக 02 விலைமுறிகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய, விபரங்களுடன் கூடிய பதிலளிப்புக்களை வழங்கியுள்ள குறைந்தபட்ச விலைமுறியை சமர்ப்பித்துள்ளது. 2024.08.01 ஆம் திகதி தொடக்கம் 2027.07.31 திகதி வரைக்கும் டோக்கியோ - நரீடா விமான நிலையத்தில் தரையிறக்க சேவைகளுக்கான ஒப்பந்தத்தை வழங்குவதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### புனரமைப்பு செய்தல்


100,000 கிலோமீற்றர் வீதிப் புனரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் தற்போது புனரமைப்பு நடவடிக்கைகள் பிற்போடப்பட்டுள்ள வீதிகளில் பாதுகாப்பான போக்குவரத்திற்குப் பொருத்தமான வகையில் 1,500 கிலோமீற்றர்களை 2024ஆம் ஆண்டில் மேம்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கான முழுமையான செலவு 20 பில்லியன் ரூபாய்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், 2024ஆம் ஆண்டில் 06 மாதங்களில் வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஆண்டின் முதல் ஆறு (06) மாதங்களில் தெரிவு செய்யப்பட்டுள்ள வீதிகளைப் போக்குவரத்திற்கு ஏற்புடைய வகையில் புனரமைப்பதற்கான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகச் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



## “பதிலளிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை”



எம்.பி.க்களின் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டிய அவசியம் எனக்கில்லை. எம்.பிக்களுக்கு நான் கட்டுப்பட்டவன் அல்லவென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி.யைப் பார்த்துக் கூறினார்.

புதிய வருடத்தில் பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை (09) முதன்முதலாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய நிலையில், எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன் வைத்தார்.

அதில், இராஜாங்க அமைச்சர் டயனா கம்கேக்கும், எதிரணியின் எம்.பி.க்களான சுஜித் பெரேரா, ரோஹன பண்டார ஆகியோருக்கும் இடையில் பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற மோதல் தொடர்பில் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் விசேட குழு நியமிக்கப்பட்டது, குழுவினர் அறிக்கை சமர்ப்பித்தார்கள். அதில் தண்டனை வழங்கல் வெவ்வேறாக குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், அதனை நீங்கள் (சபாநாயகரை நோக்கி) பொருட்படுத்தவில்லை என்றார்.

இதன்போது, குறுக்கிட்ட சபாநாயகர் அந்த விவகாரம் தொடர்பில் தான் சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டு அவர் ஆலோசனை வழங்கியுள்ளார் என்றார்.

மீண்டும் ஒழுங்கு பிரச்சினையை தொடர்ந்த லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறவேண்டிய தேவை உங்களுக்கு இல்லை. பிரதி சபாநாயகர் முன்வைத்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றால் ஏன்? அவர் தலைமையில் விசேட குழுவை நியமித்தீர்கள் என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர், உங்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டிய அவசியம் எனக்குக் கிடையது. நான் உங்களுக்குக் கட்டுப்பட்டவன் அல்ல என்றார்.

பிரதி சபாநாயகர் மீது உங்களுக்கு நம்பிக்கை இல்லை அதனால்தான் அவர் முன்வைத்த பரிந்துரைகளைச் செயற்படுத்தவில்லை என்று கூறுங்கள் என லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி.மீண்டும் கூறினார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் நீங்கள் ஏதாவது நினைத்துக் கொள்ளுங்கள். அதைப்பற்றி எனக்குக் கவலை கிடையாது. உங்களின் நிலைப்பாட்டுக்குப் பதிலளிக்க நான் தயாரில்லை என்றார்.

இதன்போது எழுந்த உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடா எழுப்பிய கேள்விகளுக்கு நீங்கள் அளித்த பதிலை ஏற்றுக்கொள்ள முடியாது.

224 எம்.பி.க்களின் உரிமை மற்றும் சிறப்புரிமைகளுக்குச் சபாநாயகரே பொறுப்புக் கூற வேண்டும்.

ஆக மூத்த அரசியல்வாதி, சபாநாயகரை என்ற அடிப்படையில் பொறுப்புடன் பதிலளிக்க வேண்டும் என்றார்.

## இலங்கை கப்பலை அனுப்புவது ஏன்?

செங்கடலில் ஹவுதி பயங்கரவாதிகளினால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் இலங்கையின் பொருளாதாரத்தில் நேரடியாகத் தாக்கம் செலுத்துவதாலேயே இலங்கை கடற்படை கப்பலை அங்கு அனுப்பவுள்ளோம். இங்குள்ளவர்கள் கிணற்றுத்தவளைகள் போல் இருந்துகொண்டு பேசக்கூடாதெனப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச “செங்கலிடலில் ஹவுதி கிளர்ச்சி குழுவை அடக்குவதற்கு 250 மில்லியன் ரூபாய் செலவு செய்து இலங்கை கடற்படை கப்பலை அங்கு அனுப்பி வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாடு வங்குரோத்து நிலையடைந்து இளைஞர், யுவதிகள் தொழில் இல்லாமல்,போராடுகின்ற நிலையில் ஹவுதி கிளர்ச்சி குழுவை அடக்குவதற்கு 250 மில்லியன் ரூபாவை செலவு செய்வதால் இலங்கைக்கு என்ன பயன்” என்று கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் , பதிலளிக்கையில்

அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகளின் நோக்கத்துக்கு அமைய ஹவுதி கிளர்ச்சி குழுவை அடக்க ஒத்துழைப்பு வழங்கவில்லை. செங்கடலில் ஹவுதி பயங்கரவாதிகளினால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் இலங்கையின் பொருளாதாரத்தில் நேரடியாக தாக்கம் செலுத்தும். செங்கடல் ஊடாக கப்பல் போக்குவரத்தை முன்னெடுக்காமல் தென்னாபிரிக்க கடல் மார்க்கம் ஊடாக சரக்கு கப்பல் போக்குவரத்தை முன்னெடுத்தால் இலங்கையில் அத்தியாவசிய பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கும் .

எனவே இங்குள்ளவர்கள் கிணற்றுத் தவளைகள் போல் இருக்காமல் விடயங்களைப் புரிந்து கொள்ள வேண்டும். தேசிய, சர்வதேச பயங்கரவாத செயற்பாடுகளை நாங்கள் என்றும் அனுமதிக்க மாட்டோம்.சர்வதேசத்தின் ஒத்துழைப்பை நாம் எதிர்பார்த்துள்ள நிலையில் சர்வதேச மற்றும் பூகோள காரணிகளுக்காக நாடு என்ற ரீதியில் நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

ஹவுதி கிளர்ச்சி குழுவை அடக்குவதற்கு 250 மில்லியன் ரூபா செலவிடப்படவில்லை. இலங்கையின் ஆழ் கடல் எல்லையைப் பாதுகாப்பதற்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பூகோள மட்டத்தில் கடல் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் காணப்படும் நிலையில் அதற்கு நாடு என்ற ரீதியில் நாமும் விசேட கவனம் செலுத்த வேண்டியது அவசியம் என்றார்.



## 60.5 சதவீதமான குடும்பங்கள் மாத வருமானத்தை இழந்தனர்

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்புக்களினால் மொத்த சனத்தொகையில் 22 சதவீதமானோர் கடனாளியாகியுள்ளதுடன், 60.5 சதவீதமான குடும்பங்களின் மாத வருமானம் இழக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் செமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (09) எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாசாவினால் பொருளாதார நெருக்கடிகளினால் சமூக கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே, இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்புக்களினால் மொத்த சனத்தொகையில் 22 சதவீதமானோர் கடனாளியாகியுள்ளனர் இந்த 22 சதவீதத்தில் நகர்ப் புறத்தைச் சேர்ந்த 24.3 சதவீதமான குடும்பங்களும், கிராமப் புறத்தைச் சேர்ந்த 20 சதவீதமான குடும்பங்களும், பெருந்தோட்ட பகுதியைச் சேர்ந்த 42.8 சதவீதமான குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

நெருக்கடியினால் பாதிப்புக்கு மத்தியில் 60.5 சதவீதமான குடும்பங்களின் மாத வருமானம் இழக்கப்பட்டுள்ள நிலையில், 91 சதவீதமானோரின் மாத செலவுகள் சடுதியாக உயர்வடைந்துள்ளன.

அத்துடன், குறுகிய காலத்துக்குள் தொழிலின்மை 14.2 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறையினர் பாதிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்கிறோம். தேசிய மட்டத்திலான தொழிற்றுறையை மேம்படுத்த மூலப்பொருள் அல்லாத உற்பத்திகளின் இறக்குமதிகளை மட்டுப்படுத்த நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

வணிக கடன் பெற்றுக்கொண்ட வாடிக்கையாளர்கள் தொடர்பில் மிதமான கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு அரச வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. சிறு, நடுத்தர தொழிற்றுறையினரின் மேம்பாட்டுக்காக 168 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தொழிற் முயற்சியாளர்களுக்கு ஒற்றை இலக்கத்தில் கடன் வழங்க விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் மொத்த சனத்தொகையில் மதிப்பீடு செய்யப்பட்ட 62 இலட்ச குடும்பங்களை அடிப்படையாகக் கொண்ட விசேட நலன்புரி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றார்.

## 2 ஒன்றியங்களை அமைக்க அனுமதி

பாராளுமன்ற ஒன்றியங்கள் இரண்டை அமைப்பது தொடர்பில் அனுமதி கிடைக்கப்பெற்றிருப்பதாக சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

புது வருடத்தில் முதன் முதலில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், செவ்வாய்க்கிழமை (09) கூடிய பாராளுமன்றத்தில், சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் கூறுகையில், பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண மற்றும் மேலும் 09 பாராளுமன்ற உறுப்பினர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய ‘இலங்கை மருத்துவ பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம்’ (Caucus of Medical Parliamentarians Sri Lanka) அமைப்பதற்கும், பாராளுமன்ற உறுப்பினர் இரான் விக்ரமரத்ன மற்றும் 21 பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைய ‘இலங்கை காலநிலை பாராளுமன்ற ஒன்றியம்’ அமைப்பதற்கும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் அனுமதி கிடைத்துள்ளது என்றார்.

குஜராத்தில் கடந்த 2002இல் நடைபெற்ற கலவரத்தின்போது பில்கிஸ் பானு என்ற கர்ப்பிணி கூட்டு பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டதோடு, அவரது குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் படுகொலை செய்யப்பட்டனர். இந்த வழக்கில் 11 பேர் கைது செய்யப்பட்டு கடந்த 2008இல் ஆயுள் தண்டனை விதித்து மும்பை சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், 11 பேரும் கடந்த 2022ஆம் ஆண்டு சுதந்திர தினத்தை முன்னிட்டு, குஜராத் மாநில அரசால் விடுதலை செய்யப்பட்டனர். இதை எதிர்த்து பில்கிஸ் பானு தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கில் விசாரணை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் நாகரத்தினா, உஜ்ஜால் புயான் ஆகியோர் தலைமையிலான நீதிபதி அமர்வு விசாரணை மேற்கொண்டது.

இந்த விசாரணையில் குஜராத் அரசு தரப்பில், கடந்த 2008இல் தண்டனை பெற்ற 11 பேரும் 14 ஆண்டுகளுக்கு மேலாக சிறை தண்டனை அனுபவித்துவிட்டனர். 1992இல் தண்டனை குறைப்பு விதிகளின்படி, மத்திய உள்துறை அமைச்சகத்தின் அனுமதி பெற்று அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர் என விளக்கம் அளிக்கப்பட்டது.

புதுடெல்லி

# “11 பேரை விடுதலை செய்தது செல்லாது”



இந்த விசாரணையின்போது நீதிபதிகள் கூறுகையில், குற்றவாளிகளின் தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்ட நிலையில், 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்த அவர்கள் எந்த விதிகளின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்? ஏற்கெனவே தண்டனை குறைப்பு செய்யப்பட்ட பிறகு மீண்டும் எப்படி தண்டனை குறைப்பு செய்யப்பட்டது?

1992இல் தண்டனை குறைப்பு கொள்கை எந்த அளவுக்கு மற்ற கைதிகளுக்கு பயன்பட்டது என்றும் இது எவ்வளவு தூரம் செயல்படுத்தப்படுகிறது என்றும், இது சம்பந்தமான தெளிவான தகவல்களை தர வேண்டும் என்றும் குஜராத் மாநில அரசுக்கு உத்தரவிட்டனர்.

மேலும், 11 பேரை முன்கூட்டியே விடுதலை செய்த குஜராத் அரசின் உத்தரவு ரத்து செய்யப்படுகிறது. ஞ அரசு எப்படி உத்தரவு பிறப்பிக்க முடியும் ?

வழக்கு விசாரணை நடைபெற்றது மகாராஷ்டிரா மாநிலம். வழக்கு விசாரணை நடைபெற்று தண்டனை அறிவிக்கப்பட்ட மாநிலம்தான் குற்றவாளியின் மன்னிப்பு மனுவை விசாரிக்கும் தகுதியுடையது.

அதனால் மகாராஷ்டிர மாநில அரசுதான் உத்தரவு பிறப்பிக்க முடியும் என உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

புது டெல்லி

# மாலத்தீவு தூதருக்கு கண்டனம்

இந்தியப் பிரதமர் மோடியின் லட்சத்தீவு பயணம் குறித்து மாலத்தீவு அமைச்சர்கள் அவதூறு கருத்து தெரிவித்ததையடுத்து, மத்திய வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் அந்நாட்டு தூதரை அழைத்து கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் மோடி கடந்த 2ஆம் திகதி அரசு முறை பயணமாக லட்சத்தீவு சென்றிருந்தார். அப்போது அங்குள்ள கடற்கரையில் எடுத்துக்கொண்ட சில புகைப்படங்கள் மற்றும் வீடியோவை அவர் சமூக வலைதளங்களில் பகிர்ந்தார். அத்துடன் “சுற்றுலா செல்ல விரும்புவோருக்கு லட்சத்தீவு மிகச் சிறந்த இடம்” என்று பதிவிட்டிருந்தார். இந்த பதிவு சமூக வலைதளங்களில் வேகமாக பரவியது. பிரதமரின் பயணம் காரணமாக இரண்டு நாட்களாக கூகுளில் அதிகம் தேடப்பட்ட வார்த்தையாக லட்சத்தீவு தொடர்ந்து முதலிடத்தில் இருந்தது.

இந்நிலையில், மாலத்தீவு துணை அமைச்சர்கள் மரியம் ஷியுனா, அப்துல்லா மஹ்சூம் மஜித், மால்ஷா ஷெரீப் ஆகியோ பிரதமர் மோடியின் லட்சத்தீவு பயணம் குறித்து சர்ச்சைக்குரிய கருத்துகளை சமூக வலைதளங்களில் பதிவிட்டிருந்தனர்.

உத்தரப் பிரதேசம்

# ராமர் சிலை ஊர்வலம் ரத்து

அயோத்தியில் ராமர் கோவில் கும்பாபிஷேகம் எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதன்போது, கோவில் கருவறையில் குழந்தை வடிவிலான ராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட இருக்கிறது. இதற்கு முன்னதாக 17ஆம் திகதி கருவறையில் பிரதிஷ்டை செய்யப்பட இருக்கும் குழந்தை வடிவிலான ராமர் சிலையை அயோத்தி நகரில் ஊர்வலமாக எடுத்துச் செல்ல முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறு சிலையை ஊர்வலமாக எடுத்துச் செல்லும்போது, அதிக அளவில் பக்தர்கள் தரிசனம் செய்யக் கூடுவார்கள். இதனால் பாதுகாப்பு பிரச்சினை ஏற்படக்கூடும் என தெரிவித்துள்ள அயோத்தி பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் ராமர் சிலை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவது ரத்து செய்யப்படுவதாக ராம ஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை அறிவித்துள்ளது.



சீனா

# சீனாவுக்கு பறந்தார் மாலத்தீவு ஜனாதிபதி

இந்தியா – மாலத்தீவு இடையேயான உறவில் சிக்கல் ஏற்பட்டுள்ள நிலையில், மாலத்தீவு ஜனாதிபதி முகம்மது முய்சு, அரசு முறை பயணமாக சீனா சென்றுள்ளார்.

இந்நிலையில், இந்தியா – மாலத்தீவு சிக்கல் தொடர்பாக குளோபல் டைம்ஸ் பத்திரிகையின் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

“மாலத்தீவை சமமான பங்குதாரராக சீனா கருதுகிறது. மாலத்தீவின் இறையாண்மையை மதிக்கிறது.

அதேபோல், மாலத்தீவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான நட்பு மற்றும் கூட்டுறவை சீனா மதிக்கிறது.

இந்தியாவுடன் நல்லுறவுடன் இருப்பது மாலத்தீவுக்கு எவ்வளவு முக்கியம் என்பதைச் சீனா அறிந்திருக்கிறது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் மோதல் போக்கு நிலவுவதால், இந்தியாவைப் புறக்கணிக்குமாறு சீனா மாலத்தீவை ஒருபோதும் கேட்கவில்லை. அதுமட்டுமல்ல சீனா, இந்தியா, மாலத்தீவு இடையே முத்தரப்பு ஒத்துழைப்பு நிலவ வேண்டும் என்றும் சீனா விரும்புகிறது.

மாலத்தீவின் புதிய ஜனாதிபதியாக



முகம்மது முய்சு தேர்வானதில் இருந்து மாலத்தீவுக்கும் இந்தியாவுக்கும் இடையேயான உறவு ஆரோக்கியமாக இல்லை. வழக்கமாக மாலத்தீவு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் தங்கள் முதல் வெளிநாட்டுப் பயணமாக இந்தியாவுக்குச் செல்வது வழக்கம். ஆனால், முகம்மது முய்சு இந்தியாவுக்குச் செல்வதற்குப் பதிலாகத் துருக்கிக்குச் சென்றுள்ளார். புதிதாக ஆட்சிக்கு வரக்கூடியவர்கள், தாங்கள் கையாள வேண்டிய விஷயங்களின் முக்கியத்துவம் மற்றும் அவசரத்தின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கிறார்கள்” என்று குளோபல் டைம்ஸ் பத்திரிகையின் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லெபனான்

# ஹிஸ்புல்லா அமைப்பின் முக்கிய தளபதி பலி



இஸ்ரேல் மீது கடந்த ஒக்டோபர் மாதம் ஹமாஸ் அமைப்பினர் பயங்கர தாக்குதல் நடத்தினர்.

இதற்கு பதிலடியாக காசா மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதலை தொடங்கியது. மூன்று மாதங்களை கடந்து தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. காசா மீதான தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து ஹமாஸ்க்கு ஆதரவாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பு இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், திங்கட்கிழமை (08) சொகுசு காரில் சென்ற ஹிஸ்புல்லாவின் முக்கிய தளபதியை குறிவைத்து இஸ்ரேல் வான் தாக்குதல் நடத்தியுள்ளது. இதில் ஹிஸ்புல்லா தளபதி விஸ்ஸாம் அல்-டவில் உயிரிழந்ததாக லெபனான் தெரிவித்துள்ளது.

ரோம்

# வாடகைத்தாய் முறைக்கு “தடை விதிக்க வேண்டும்”

குழந்தை இன்மையை போக்க ஏராளமான மருத்துவ தொழில்நுட்பங்கள் வளர்ந்து விட்டன. அவற்றில் ஒன்றுதான் இந்த வாடகைத்தாய் எனும் முறை.

ஒரு பெண் மற்றொரு பெண்ணுக்காக தன்னுடைய கர்ப்பப்பையை பயன்படுத்தி குழந்தை பெற்றெடுக்கும் முறையே வாடகைத்தாய் எனப்படுகிறது. குழந்தை பிறந்த பிறகு அதை குறிப்பிட்ட பெற்றோரிடம் ஒப்படைக்க வேண்டும்.

வாடகைத்தாய் மூலமாக குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் போக்கு அண்மைக்காலமாக உலக அளவில் அதிகரித்து விட்டது.

இந்நிலையில், “வாடகைத்தாய் முறைக்கு சர்வதேச அளவில் தடை



கொண்டு வர வேண்டும்” என போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

ரோம் நகரில் வெளியுறவு கொள்கை தொடர்பாக போப் உரையில் இந்த தகவல் இடம் பெற்றுள்ளது.

மேலும், வாடகைத்தாய் முறையை இழிவானது என்றும் விமர்சித்துள்ள போப் பிரான்சிஸ், வாடகைத்தாய் முறை அமைதி மற்றும் மனித கண்ணியத்திற்கு அச்சுறுத்தலானது என்றும் சாடியுள்ளார்.

## இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# சிம்பாப்வேயை வென்ற இலங்கை



சிம்பாப்வேக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இலங்கை வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டாவது போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வேயின் அணித்தலைவர் கிரேய்க் எர்வின் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வேக்காக எர்வின் 82 (102), றயான் பேர்ள் 31 (37), ஜொய்லோர்ட் கும்பி 30 (37), மில்டன் ஷும்பா 26 (45) ஓட்டங்களைப் பெற்றபோதும், டில்ஷான் மதுஷங்க, மகேஷ் தீக்ஷன (4), துஷ்மந்த சமீரவிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 209 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, றிச்சர்ட் நகரவா (5), சிகண்டர் ராசா (2), பிளஸிங் முஸர்பனியிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்தபோதும் ஜனித் லியனகேயின் 95 (127), ஜெஃப்ரி வன்டர்சேயின் ஆட்டமிழக்காத 19 (18), துஷ்மந்த சமீரவின் ஆட்டமிழக்காத 18 (25) ஓட்டங்களோடு 49 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக லியனகே தெரிவானார்.



## இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரின்போது

# மீள்வருகையை இலக்கு வைக்கும் ஷமி

கணுக்காயல் காயமொன்றிலிருந்தான தனது குணமடைதலானது சரியான திசையில் சென்று கொண்டிருப்பதாகவும், இங்கிலாந்துக்கெதிரான டெஸ்ட் தொடரின்போது, மீள்வருகையை மேற்கொள்வதாகவும் இந்தியாவின் வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் ஷமி நம்பிக்கையை வெளியிட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான குழாமில் ஷமி உள்ளடக்கப்பட்டிருந்தபோதும் பின்னர் அவர் மீளப் பெறப்பட்டிருந்தார்.



# ‘ஆரம்பத்தில் ஸ்மித், நான்காமிடத்தில் கிறீன் சிறந்தது’

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான டெஸ்ட் தொடரில், அவுஸ்திரேலியாவானது ஸ்டீவன் ஸ்மித்துடன் ஆரம்பித்து, சகலதுறைவீரர் கமரன் கிறீனை நான்காமிடத்தில் துடுப்பெடுத்தாடினால் சிறந்தது என அவுஸ்திரேலியாவின் மர்னுஸ் லபுஷேன் தெரிவித்துள்ளார்.

குறித்த தொடருக்கான குழாமானது இன்று அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற கிளாசென்

டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஓய்வு பெறுவதாக தென்னாபிரிக்காவின் ஹென்றிச் கிளாசென் அறிவித்துள்ளார்.

இந்நிலையில், ஒருநாள் சர்வதேசப் போட்டி, இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் தொடர்ந்தும் கிளாசென் விளையாடவுள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்ட கிளாசென், கடந்தாண்டு வரையில் நான்கு போட்டிகளில் விளையாடியிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 10 ஜனவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.